# பழமையின் சின்னம்

அலக்காக ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டார் பேராசிரியர். "மாமல்லபுரத்து சிற்பங்களை எந்த மட்டும் ரசித்து வந்தீர்களப்பா?" என்று அவர் வினவியபொழுது, அவர் குரலில் அழுத்தம் நிறைந்திருந்தது. ஆனால் முகத்திலே முறுவலும் அரும்பியது.

ராமநாதனும், அவனுடைய தோழர் குழுவும் கூறிய விடைகளைக் கேட்டுப் பேராசிரியர் மீண்டும் புன்னகைத்தார். "நான் சொல்லப்போவதை கவனியுங்கள். மஹேந்திர பல்லவர், நரசிம்ம பல்லவர், கல் யானைகள், கல் ரதங்கள், சிற்பக்கலை என்று கேட்டு கேட்டு எனக்கென்னவோ அலுத்துவிட்டது. நீங்கள் அதிலே என்ன புதுமை . . . . தப்பு, தப்பு, என்ன பழமை காண்கிறீர்களோ . . .இருக்கட்டும். ஒரு போட்டி! ஒரு சிறந்த கலைப் புத்தகம் பரிசு! கேளுங்கள் விவரம்! இரண்டு வார விடுமுறையோ வருகிறது. நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே, உங்கள் இஷ்டப்படி, பழங்காலச் சரித்திர சம்பந்தமான ஒரு ஊருக்கோ, மலைக்கோ, கோயிலுக்கோ போய், அதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதவேண்டும். நம் கல்லூரிப்பத்திரிகையிலே, மாதந்தோரும் ஒரு கட்டுரை போட்டு, பிறகு, சிறந்த கட்டுரை தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்குவோம்!" என்று முழங்கினார் பேராசிரியர்.

"சார், சார், விளக்கிச் சொல்லுங்கள்! நீங்களே சில இடங்களைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்!" என்று கேள்விகளைக் கேட்டு தங்கள் உற்சாகத்தை அந்த குழுவினர் புலப்படித்தனர்.

"நீங்கள் அனைவரும் ஒன்றுகூடிப் போகவேண்டாம். வேறு வேறு இடங்களுக்குத் தனித்தனியே போய்வரவேண்டும். நீங்கள் தேர்ந்தெடுக்கும் இடங்கள் பிரசித்தமான இடங்களாக இருக்கவேண்டாம். அவற்றைப்பற்றி பலபேர், பற்பல எழுதியாயிற்று! எங்கோ ஒளிந்து மறைந்திருக்கும் சிறு இடங்களுக்கு மதிப்புக் கொட்ங்கள். பழங்காலப் பெருமை படைத்த பல சிறு இடங்கள் தென்னாட்டிலே சிதறியுள்ளன. அவற்றை நம் கல்லூரிப் பத்திரிகைமூலம் பெருமைப் படுத்துவோம்!" என்று பேராசிரியர் மீண்டும் முழங்கிய பொழுது, வாலிப மாணவர்களும் பெருமிதம் கொண்டனர். அவர்களுடைய ரசிகத் தன்மைக்கு அவர் விடுத்த சவால் என்று அவர்கள் சினங்கொள்ளவில்லை. பேராசிரியர், நண்பர்போன்று விளங்கும் நல்லாசிரியராயிற்றே!

தரையில் சிந்திய பாதரசம்போல் சிதறிப் பிறிந்தனர் மாணவர்கள்.

"நான் எந்த இடத்திற்க்குப் போகலாம்?" என்று ராமநாதன் யோசித்தான்; பிறகு கவலைப்பட்டான்.

"பிரசித்தமான இடங்களை ஏதாவது புத்தகத்தின் மூலம் தெரிந்துகொள்ளலாம், அப்பா! இப்பொழுது என்ன செய்வது? முக்கியத்துவம் ஏற்படாத இடமாகக் கண்டுபிடிக்க வேண்டுமே!" என்று அவன் தந்தையிடமும் கூறினான்.

உயரத்திலும், உடலுறுதியிலும், மிடுக்கிலும் உயர்ந்து விளங்கும் தம் புதல்வன்! குழந்தை போன்று குழைவுடன் தம்மிடம் வந்து சொன்னதைக் கேட்டு, அந்த தந்தையும் கனிவுடன் சோர்ந்தார். பாதரசம் தீண்டிய பொன் போலாகிவிட்டார்!

"இந்தப் பட்டணத்துக்கிட்டயே பாடி, திருத்தணி என்று கொள்ளையாய் இருக்கே! பாடல் பெற்ற ஸ்தலங்களாச்சே!" என்றார் மெல்ல.

"சரித்திரத்துக்குச் சம்பந்தப்பட்டதாக இருக்கணும் அப்பா! அடியார்களுக்கும், மதத்துக்கும் சம்பந்தப்பட்டதாக வேண்டாம்!" என்று ராமநாதன் கூறியதும், சாந்தா தோன்றினாள் அங்கே, கூந்தலை வாரிய படியே.

"அப்படியானால் உனக்கு ஒரு இடமும் அகப்படாது, அண்ணா!"

சாந்தாவைப் பார்த்து ராமநாதன் முறைத்தான்.

“ஏன் அண்ணா, முந்தியெல்லாம் அரசியலுக்கும், மதத்திற்கும் தொர்பு எப்போதுமே உண்டு! மன்னர்கள் ஆலயம் கட்டினார்கள் - பக்தர்கள் . . .. .”

ராமநாதன் தணிவுடன் தங்கையைப் பார்த்தான். அப்பொழுது அவர்களுடைய தம் மனைவியை இரண்டுமுறை அழைத்துவிட்டு, “அம்மாவைக் கேட்கணும், அவளுக்கு நினைவிருக்கலாம், ஸ்ரீனிவாசநல்லூரில் ஒரு கோயில் இருக்கிறது என்று நினைவு. சரித்திர சம்பந்தமானது என்று அதை அரசாங்கம் பாதுகாத்து வருகிறது என்று கேள்விப்பட்ட ஞாபகம்,” என்றார்.

அம்மாவை இழுத்துக்கொண்டுவர சாந்தா ஓடினாள். வந்தாள் அந்த அம்மாள் முகமலர்ச்சியுடன்,

“ஆமாம், குரங்குநாதர் கோயில் என்று ஒரு கோயில் அங்கே இருக்கிறது,” என்றாள். பிறகு விஷயம் விளங்கியதும் மிகவும் சந்தோஷங்கொண்டாள். “இதை சாக்கிட்டாவது போய் வா, ராமு. அம்மாஞ்சி மன்னி பாவம், போனவருஷம்கூட கேட்டாளே? “உன் குழந்தைகள் எங்கள் பட்டிக்காட்டுக்கு வரவேண்டாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார்களாடி?” என்று அவள் கேட்டபோது எனக்கும் வருத்தமாக இருந்தது. ‘பட்டணத்துப் பையன் மதிச்சு வந்தானே,’ என்று அவளுக்குப் பெருமை பிடிபடாது, நீ போனால்; போய்வா, பேஷாக!” என்றாள் தாயார்.

சாந்தா கொஞ்சலாக, “அம்மா, நானும்?” என்று கேட்டாள். ராமநாதனின் வதனம் ஆலங்கட்டிகளை அள்ளியபடி மழையை ரசிக்கும் குழந்தையின் வதனம் போல் மாறிவிட்டது.

“அம்மா, அம்மா, சாந்தாவும் வந்தால்தான் தேவலை! அந்தப் பட்டிக்காட்டில் எப்படியப்பாஎன்று பயந்தேன் இத்தனை நேரம்!” என்று ராமநாதனும் வற்புறுத்தவே, அவனுடை அன்னை மறுக்கவில்லை.

“உங்களை மன்னி ஆயிரம் உபசரணை பண்ணுவாள், பயப்படவேண்டாம். அங்கே போய் எங்கள் அம்மாஞ்சி மன்னியை எப்படி கூப்பிடணும் என்று முழிக்காதேடி சாந்தா! மாமிதான் உங்களுக்கு!” என்று பதிலளித்தாள் அந்த அம்மாள்.

** ** **

முன்னறிவிப்பாக ஒரு கடிதம் போட்டுவிட்டுத் திருச்சிக்கு வந்து சேர்ந்தனர் ராமநாதனும், சாந்தாவும். அவர்கள் தங்கிய நண்பரகத்திற்கு ஸ்ரீனிவாசநல்லூர் மாமா வந்தார். வெகுவாக அன்பும் ஆதரவும் காட்டி, பஸ்ஸிலே அவர்களைத் தம்முடைய சிற்றூருக்கு அழைத்துச்சென்றார். பஸ்ஸிலே செல்லும்பொழுது அவர், “குரங்குநாதர் கோவிலை பார்க்கவேண்டும் என்பதற்காவது எங்கள் ஊருக்கு வருகிறீர்களே!” என்று கூறி, தம்முடைய மகிழ்ச்சியைப் புலப்படித்துவிட்டு, உடனே ராமநாதனின் மகிழ்ச்சியைப் போக்கும் வகையில் பேசத்தொடங்கினார்.

“எங்கள் ஊரில் என்ன விசேஷம் இருக்கிறதோ, அத்தனை தான் அந்த கோவிலும் விசேஷம்! . . . அதாவது, ஒன்றுமில்லை! ஏதோ நாங்கள் பந்துக்கள் இருக்கிறோம் என்பதற்காகத்தான் நீங்கள் வரவேண்டும்!” என்றார் மாமா.

“உங்கள் ஊரில் புராதனக் கோயில் இருப்பதே ஒரு விசேஷமாச்சே!” என்று சாந்தா சொன்னதையும் அவர் ரசிக்கவில்லை. “என்ன கோயில் அது! பூட்டியே கிடக்கு! போனால் திறந்து பார்க்கலாம். எங்கள் அக்ரஹாரத்துக் கோயிலைத்தான் நாங்கள் உபயோகிக்கிறோம். குரங்குநாதர் கோயிலில் எவனோ ஒரு ராஜாவைப்பற்றி ஏதோ எழுதியிருக்கிறதாம், பாதுகாத்து வருகிறார்கள்,” என்று அவர் ஆர்வமின்றிக் கூறிய தகவல், ராமநாதனின் உற்சாகத்தை பறித்துவிட்டது.

ஏற்றிவந்த பஸ் ஒரு சிறு மதகின்மீது நின்றது. காவிரியின் ஒரு கிளை வாய்க்கால் போல் ஓடும் அந்த இடத்திலே, மூவரும் இறங்கினார்கள். அங்கே தென்பட்ட ஒரிரு ஆட்களிடம், சாமான்களைக் கொணரச்சொல்லி உத்தரவிட்டு மாமா வேகமாக நடந்தார். “வீடு எங்கே?” என்று கேட்ட சாந்தாவிற்கு அவர் காட்டிய திசையில் ஒரு நீண்ட மண்சுவர் தெரிந்தது. பேசாமலே நடந்தார்கள் பட்டணத்துக் குழந்தைகள்.

வாய்க்காலின் கரையோடு சிறிது தூரம் நடந்து, அவர்கள் பார்த்த சுவரைக் கடந்து உள்ளே புகுந்தனர். கிணறு, நெற் கொட்டகை, தென்னை மரங்கள் . . . ஓஹோ, இது வாசற்புறம் அல்ல.

“புழக்கடையா இது?”

“அமாம்மா, குறுக்கு வழி.”

புத்தகங்கிலே சாந்தா படித்திருந்த கிராமப் பிரவேசக் காட்சிகள் வேறு. ஜல் ஜல் என்று சதங்கை மணி ஒளியை எழுப்பும் மாட்டுவண்டி, தெருவில் வாசற்புறம் தோறும் தென்படும் முகங்கள் . . . இவற்றைச் சாந்தா காணவில்லை.

கிராப்புத் தலைச் சிறுவன் ஒருவன் கூவிக்கொண்டே எட்டிப் பார்த்துவிட்டு உள்ளே ஓட்டமாய் ஓடினான். திரும்பவும் வந்து, முன்பின் பாராத ராமனாதனை அணுகி, “அத்தான்!” என்று கூறி, ஆசையாய்க் கைகளைப் பிடித்துக்கொண்டான். களை பொருந்திய அந்த முகம் ராமநாதனுக்குத் தென்பூட்டியது.

அதற்குப் பிறகு பத்து நிமிஷங்களுக்குள், பல இனிய நிகழ்ச்சிகள் வெகு துரிதமாக நடந்தேறின. குழைவுடனும், பணிவுடனும் உறைவாடிய குழந்தைகளுக்கிடையே சந்தோஷமாகச் சிரித்துப் பேசி, அண்ணனும் தங்கையும் உள்ளம் குளிர்ந்தனர். அன்பைச் சொரிந்து உபசரணைச் செய்யும் மாமாவும் மாமியும் உள்ளங் குளிரும் வகையில் அண்ணனும் தங்கையும் நடந்துகொண்டு பெருமிதமடைந்தனர். இந்த இன்பச் சூழ்நிலையை, ராமநாதனைவிட சாந்தா அதிகமாக அனுபவித்தாள். ராமநாதனுக்குக் கோயிலைப் பற்றிய கவலை.

கிராமத்திற்கு வந்த மறுநாளே, மாமா அவர்களை குரங்குநாதர் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அரசாங்கத்தின் பாதுகாப்பிலே அந்தக் கோயில் இருக்கிறது என்பதை அறிவிக்கும் கம்பமும் பலகையும் முன்புறம் தென்பட்டதும் குதூகலமடைந்த ராமநாதன், கொஞ்ச நேரத்திற்குள் சோர்வுற்றான்.

ஒரு சிறு கோபுரம் கொண்ட ஒரு சின்னஞ் சிறு கர்ப்பக் கிருஹம் - பதினைந்தடி உயரம்தான் இருக்கும்; இதுதான் கோயில். அதைச் சுற்றிலும் இரும்புக் கிராதியைப் போட்டு அரசாங்கம் தன் கடமையைச் செய்திருந்தது. வெளிப்புற சுவர்களில் சில சாஸனங்கள் தென்பட்டன. ராமநாதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. சுவர்களில் செதுக்கியிருந்த சில உருவங்கள் உருவமற்றும், உருவம் சிதைந்தும் தோற்றமளித்தன. உள்ளே ஏதாவது விஷேச அம்சம் உண்டோ? ஊஹூம், அங்குமில்லை. உள்ளே சூழ்ந்திருந்த இருளில் ஒன்றும் புலனாகவில்லை. ஒரு சிறு அகல்கூட இல்லை. உள்ளே புக வழிவளித்த கதவுதான் கொஞ்சம் வெளிச்சங்கொடுத்தது. ஒருபுறம் ஏதோ உருண்டை வடிவங்கள் தெரிந்தன. “என்ன, என்ன?” என்று துடிப்புடன் கேட்டான் ராமநாதன். “பானைகளுங்க, நாங்க வச்சிருக்கோம்.” என்று விளக்கினான், கதவைத்திறந்த ஆள். மண்பாண்டம்போல உடைந்து சிதறியது ராமநாதனின் ஆசை. மீண்டும் வெளியே வந்தபோது நாற்புறமும் பார்த்தான். பயன் தரும் சரக்கு, அவனைப்பொறுத்தமட்டும் காணவில்லை.

“இந்த நாலு எழுத்துகளுக்குத்தான் இந்த பந்தோபஸ்து!” என்று சாந்தாவிடம் சொன்னாள், மாமாவின் பெண் அன்னம். ராமநாதன் திரும்பிப் பார்த்துவிட்டு, அவள் கூறியதை மனதில் பதித்துக்கொண்டான்.

“இதுவும் முக்கியம்தான்! ஒரு செப்பேடு, சாஸனம், ஓலைச்சுவடி என்றால்கூட விடமாட்டார்களே! இது நகர்த்தமுடியாத கல் சாஸனம் என்று வைத்துக்கொள்ளவேண்டும்; கோயில் என்று பிராமதப்படுத்தக்கூடாது, அவ்வளவுதான். கோயிலில் விக்கிரகம்கூட இல்லையே!” என்றாள் சாந்தா.

“இருக்கிறதே!” என்றார் மாமா.

“குரங்குநாதர் இருக்கிறாரே, இருட்டிலே தெரியவில்லை!” என்றாள் அன்னம்.

“ஐயையோ, அப்படியா? என்ன சுவாமி?”

“குரங்குநாதர் தான் சுவாமி.”

“அப்படியா? . . . அப்படியென்றால் . . . ஆஞ்சநேயரா?”

“ஆமாம், அனுமார் கோயில்தான் இது.”

சாந்தாவும் ராமநாதனும் பொருள்படப் பார்த்துக்கொண்டனர்.

அங்கிருந்த மூன்று நாட்களும் ராமநாதன் கையில் போட்டோ காமிரா, டார்ச்சு விளக்கு சகிதம் ஒரிரண்டு நடைகள் போய், கோவிலை ஆராய்ந்தான். ஆனால் ஒன்றும் விசேஷமாகக் காணாமல், விஷயம் விளங்காமல் தடபுடல் படுத்த அவனுக்கும் கூச்சமாகத்தான் இருந்தது. சாந்தா, அம்மங்காள் அன்னமுடன் காவேரிக்குச் செல்வதில் ஆர்வம் காட்டினாள். ஆதலால், ராமநாதன், தனியாகக் கோவிலுக்குச் சென்று கொஞ்சம் முயன்றான்; படம் பிடித்தான்.

ராமநாதனையும் சாந்தாவையும் வழியனுப்பி விடை கொடுத்து உபசரிக்கும் பொழுது மாமி, “விஷயம் நிறைய அகப்பட எங்கள் ஊரில் என்ன இருக்கப்பா, ராமு?” என்று கூறி வருந்தினாள். ஆனால் சாந்தா, உண்மையான மகிழ்ச்சியோடு, “ரொம்ப குஷாலாகப் போயிற்று மாமி! அண்ணா வந்ததைச் சாக்கிட்டு நானும் வந்தேனே என்று சந்தோஷப்படுகிறேன்! ஜோராக இருந்தேன் இங்கே!” என்று புகழ்ந்துரைத்தாள்.

“நாலு நாளைக்கு நன்றாயிருக்கும்; எப்பொழுதும் இங்கிருப்பவர்களுக்கு இந்தப் பட்டிகாட்டில் என்ன இருக்கு அத்தங்கா?” என்று அந்த சமயத்தில் மெல்ல ஒலித்தக்குரல், அன்னத்தின் குரல்தானா?

ராமநாதன் கூர்ந்து நோக்கினான்; குரலுக்குடையவளின் முகத்தில் இழைந்திருந்த வருத்தமும் புன்னகையும் கண்டான். அன்னம் அப்பொழுதுதான் அவனுக்கு ஒரு பொருட்டாக விளங்கினாள். நாலுநாட்களாக அவளைக் கவனியாததைக் குறித்து லேசாக வருத்தம்கூட அடைந்தான், “இந்தமட்டும் சொன்னாளே! தெரிகிறதே! பெருமை பீத்திக்கொள்ளவில்லையே!” என்று வருத்தத்தினிடையே ஆறுதலடைந்தான்.

** ** **

சென்னைக்குத் திரும்பிவரும் வழியிலே சாந்தா உற்சாகமுடன், தனக்கு நடந்த உபசரணைகளைப் பாராட்டினாள். பெயர் பெயராகக் குறிப்பிட்டுப் புகழ்ந்தாள். “உபசாரம் செய்தபேரைப் போற்றத்தான் தோன்றும்!” என்று அண்ணன் அபிப்பிராயம் கூறியதற்குக் கலகல்வெனச் சிரிப்புகளைச் சொரிந்தாள். “நீ ஏதாவது குறிப்புகள் எழுதிக் கொண்டாயா அண்ணா?” என்று கேட்டாள்.

உதட்டை பிதுக்கிவிட்டு ராமநாதன், “நீ உன் டயரியில் ஏதோ எழுதிக்கொண்டிருந்தாயே, கோயிலைப் பற்றி என்ன எழுதியிருக்கிறாய்?” என்று கேட்டான்.

“குரங்குநாதர் என்றால் அனுமார்தான் என்று தோன்றாது போயிற்றே! அதைதான்!” சிரித்தவாறே சாந்தா தன் டயரிப் புத்தகத்தைக் கொடுத்தாள்.

பட்டுச் சட்டைக்காக ஆசைபடும் குழந்தை, பெப்பர்மெண்டு சாப்பிடக் கிடைக்கும் அரையணாப் பரிசுக் காசுக்கு அடங்கிவிடுவதில்லையா? அதுபோலவே ராமநாதனும் அந்தக் குறிப்புப் புத்தகத்தை ஆவலுடன் படிக்கத் தொடங்கினான்.

“ஒரே ஒரு தெரு; ஏறக்குறையப் பத்து வீடுகள் - அவ்வளவுதான் அக்ரஹாரம். இதிலே அவர்கள் எத்தகைய இன்னல்களுக்கிடையே வாழ்க்கை நடத்தினாலும், அந்தச் சிரமம் எங்களுக்குக் கூடாது என்று அன்பும் ஆதரவுமாக விளங்குகிறார்கள். இவர்களிடம் குடிகொண்டுள்ள விருந்தோம்பல் பண்பு பட்டணத்து மக்களிடம் ஏது? நேற்றிரவு தலைவலியினால் நெடுதூரம் தூக்கமில்லை. மாமா இதைக் கவனித்துவிட்டு, அயர்ந்துறங்கும் மாமியை உலுக்கி எழுப்பிவிட்டார். மாமி மிரள மிரள விழித்தாள். தூக்க மயக்கம் தெளிந்து, மாமா கூறியது புரிந்ததும், பரபரப்புடன் மாடியிரங்கியோடி, மிளகு கரைத்து, கும்மட்டி மூட்டிக் காய்ச்சி, எனக்குத் தலைபற்று போட்டாள். நடுநிசி! எத்தனை ஆதரவு! என்ன பெருங்குணம்!

“காலையில் அழகான காட்சி கண்டேன்! மாமி அடுப்பு மூட்டி, காப்பி டிகாக்ஷன் தயாரிக்கிறாள். அதற்குள் அன்னம் மாட்டுக்கொட்டிலுக்குப் போய் நிற்க, வேலையாள் மாடுங் கன்றும் ஓட்டி வந்து நிறுத்தினான்.

அன்னம் பால் கறந்தாள்! பல் தேய்த்தபடி இக்காட்சி கண்டு நின்றேன். பற்பசை வாயெல்லாம் பூசியிருக்க, பட்டணத்துப் பெண் நான் நின்ற காட்சி கண்ணராவி தான்!"

"விந்தை! பதினைந்து வயதுப் பெண் அன்னம் எத்தனை அழகு துலங்க தெய்வ வழிபாடு செய்கிறாள்! காவிரியிலிருந்து குடிநீர் எடுத்துவர அவள் புறப்பட்டபொழுது நானும் போனேன். வீட்டிலேயே குளித்துவிட்டுத்தான் போனோம். நாங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கிய இடத்தைத் தாண்டி, வாய்க்காலின் கரையோடு நடந்து ஒரு அரசமரத்தடிக்கு வந்தோம். சரிந்தும், உடைந்துக்கிடைந்த சில நாகர் சிலைகளுக்கு நடுவே பிள்ளையார் மட்டும் சோபிப்பதற்குக் காரணம், அன்னம் செய்யும் தினசரி கைங்கரியம்தான்.

"ஓடும் வாய்க்காலிலின்று குடத்தில் நீரை மொண்டு பிள்ளையாரை முதலில் நீராட்டினாள். கையில் கொண்டுவந்திருந்த பித்தளைப் புஷ்பக் கூடையை நான் இப்பொழுது கவனித்தேன். கூடையிலிருந்து, சிறு கிண்ணங்களில் வைத்து இருந்த தயிரையும் பாலையும் எடுத்து அபிஷேகம் செய்தாள். மீண்டும் நீர் மொண்டுவந்து முழுகாட்டினாள். கூடையிலிருந்த சிறு தகர டப்பாக்களைத் திறந்தாள். மஞ்சளைக் குழைத்துப் பிள்ளையாரின் மேனியில் பூசினாள். பிறகு இரண்டு கண்களைக் குறிப்பாகத் திறந்துவிட்டாள். துதிக்கையின் உருவமும் வளைவும் சரியாக, எடுப்பாகத் தெரியவேண்டி மேடிட்டிருந்த துதிக்கையின்மீது குங்குமப் பொட்டுகளை வரிசையாக இட்டாள். பிறகு பிள்ளையாரின் முன்னிலையில் கோலம் இட்டாள். பழம், பாக்கு, வெற்றிலை, வெல்லம், நிவேதனம் செய்து கும்பிட்டு எழுந்தாள்.

"ஆஹா, என்ன பாங்குடன் ஒரோர் அம்சமும் கவனித்துச் செய்தாள்! மணப்பருவம் எய்திவிட்டதால், பாட்டியின் சொற்படி பிள்ளையார் கைங்கரியமும், துளசி வணக்கமும் தினந்தோரும் செய்கிறாளாம். வாரந்தோரும் புஷ்பக் கூடையை துலக்கி, டப்பாக்களில் சாமான்களை நிரப்பி, தினந்தோரும் மலர் பறித்து, தயிர் பால் சகிதம் வந்து தெய்வத்தை வணங்குகிறாள்."

"கோலப் பொடி, குங்குமம், மஞ்சள் அக்ஷதை ஆகிய பொருள்களை அவள் வைத்துக்கொள்ள, பிலாஸ்டிக் சிமிழ்களும், டப்பிகளும் அனுப்பட்டுமா நான்?"

"குடிநீர் எடுப்பது காவிரியில்தான். அரசமரத்தடிப் பிள்ளையாரைக் கடந்து மேடான ஒரு இடத்தில் ஏறி இரங்கினால், கடல்போலப் பரந்துளது காவேரி! மணல் திட்டுகள் ஏற்பட்டு நீர் வற்றும் நாட்களில் மணலில் ஊற்றுப் பறித்து, ஊறும் நீரில் தெளிந்த நீரை எடுப்பார்களாம், என்னமோ புதுப்புது விஷயங்கள் கேள்விப்படுகிறேன்! தாமிரத் தோண்டியைத் தள தளவென்று துலக்கி, அதிலே எடுக்கும் நீரைப் பருகினால் - ஆஹா, என்னமாயிருக்கிறது!"

முடிந்தது குறிப்புறை.

"சமாச்சாரம் முழுதும் அன்னமாய்த்தானிருக்கிறது!" என்று கூறியபடியே புத்தகத்தைக் கொடுத்தான் ராமநாதன்.

"எனக்கு அன்னத்தை ரொம்ப பிடிச்சுருக்கு அண்ணா! எல்லாக் கிராமப்பெண்களும் இவள்மாதிரி இருப்பதில்லை; இவள் தினுசே தனி . . . "

"சரி, சரி, அந்தப் பேப்பரைக் கொடு."

முறிந்த பேச்சினால் அவனுடைய சிந்தனை முறியவில்லை.

அரையணாப் பரிசுக்காசைச் சிறு தீனிக்கு செலவழிக்காமல் அறிவுப்பசிக்கு ஒரு குட்டிப் பத்திரிகையை வாங்கி மகிழும் குழந்தையாகிவிட்டான் ராமநாதன்.

"பண்டைக் காலப் பெண்களின் பெருமைக்குச் சின்னம் என்று கூறும் வகையில் அன்னம் விளங்குகிறாள்; 'அண்ணா காணாத பழமையின் சின்னம் நான் கண்டேன்!' என்று நீ பெருமையாக எழுதிகொள்ளலாம், சாந்தா! இல்லையா?"

“ஓஹோ ஹோ, ஆமாம் அண்ணா, ஆமாம்! சரியாக அமைகிறது. விருந்தோம்பல், தெய்வ வழிப்பாடு . . . பேஷாக எழுதலாமே ஒரு கதை போல கட்டுரை! ஏன் அண்ணா, நீயேதான், நீ சொன்ன கருத்துடனேயே என் டயரிக் குறிப்புகளையும் சேர்த்துக் கொண்டு எழுதலாமே! எழுதேன்!”

சாந்தா அக்கறையோடு கேட்ட இந்தக் கேள்வி ராமநாதனைப் புன்னகை பூக்கச்செய்தது.

ஆம், எழுதலாம். பலமுறை பார்த்து ஆராய்ந்தும் மனதில் பதியாத கோயிலைப்பற்றி ஒன்றும் எழுதவேண்டாம். ஆனால் ஒரிரு முறைகள் கூர்ந்து பார்த்ததால் உள்ளத்தில் பதிந்துவிட்ட கன்னிகையையும், அவளுடையா சூழ்நிலையையும் பற்றி எழுதலாம்.

ஆனால் பேராசிரியர் கலைப்புத்தகம் பரிசு வழங்குவாரா? மாட்டார்.

தோழர்களோ, “காதற் கட்டுரையா? கன்னிகை அன்னம்தான் உனக்குப் பரிசு!” என்று கும்மாளமடிப்பார்கள்.

“போட்டிக்கு பொருத்தம் ஆகாதே, சாந்தா!” என்று அண்ணன் கூறியதை சாந்தா நம்பினாள்.

ராமநாதனின் உள்ளம்தான் நம்ப மறுத்தது!

**********

(காவேரி, ஆகஸ்ட், 1952)